இனிமையான குழந்தைகளே ! நீங்கள் பாரதத்தின் மிகவும் அதிக மதிப்புவாய்ந்த வேலைக்காரர்கள். நீங்கள் ஸ்ரீமத்படி உங்களுடைய உடல், மனம், பொருளினால் இதை இராம இராஜ்யமாக மாற்ற வேண்டும்.

கேள்வி: உண்மையான அலௌகீக சேவை எது? அதை குழந்தைகளாகிய நீங்கள் இப்போது செய்கிறீர்கள்?

பதில்: குழந்தைகளாகிய நீங்கள் குப்தமாக ஸ்ரீமத்படி தூய்மையாகி சுகதாமத்தை ஸ்தாபனை செய்துக் கொண்டிருக்கிறீர்கள். இதுவே பாரதத்தின் உண்மையான அலௌகீக சேவையாகும். நீங்கள் எல்லையற்ற தந்தையின் ஸ்ரீமத்படி அனைவரையும் இராவணனின் சிறையிலிருந்து விடுவித்துக் கொண்டிருக்கிறீர்கள். இதற்காக நீங்கள் தூய்மையாகி மற்றவர்களையும் தூய்மை யாக மாற்றுகிறீர்கள்.

பாடல்: கண்ணில்லாதவர்களுக்கு வழி காட்டுங்கள் பிரபுவே...........

ஓம் சாந்தி. ஓ, பிரபுவே, ஈஸ்வரா, பரமாத்மா என்று கூறுவதற்கும் அப்பா என்று கூறுவதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. ஓ, பிரபுவே ! என்று கூறும் போது எவ்வளவு மதிப்பிருக்கிறது. அவரை தந்தை என்று கூறும் போது, தந்தை என்பது மிகவும் சாதாரணமாக இருக்கிறது. பல தந்தைகள் இருக்கிறார்கள். ஓ, பிரபு, ஓ, ஈஸ்வரா ! என பிரார்த்தனை செய்யும் போது கூறகிறார்கள். தந்தையே ! என ஏன் கூறுவதில்லை. பரம தந்தை அல்லவா. ஆனால் தந்தை என்ற வார்த்தை மறைந்திருக்கிறது. பரமாத்மா என்ற வார்த்தை உயர்ந்திருக்கிறது. ஓ, பிரபுவே, கண்ணில்லாதவர் களுக்கு வழி காட்டுங்கள் என அழைக்கிறார்கள். பாபா, எங்களுக்கு முக்தி ஜீவன் முக்தி யின் வழி காண்பியுங்கள் என ஆத்மாக்கள் கூறுகின்றன. பிரபுவே ! என்ற வார்த்தை எவ்வளவு பெரியது. தந்தை என்ற வார்த்தை எளிதாக இருக்கின்றது. இங்கே தந்தை வந்து புரிய வைக்கின்றார் என நீங்கள் அறிகிறீர்கள். லௌகீக முறைப்படி நிறைய தந்தைகள் இருக்கிறார்கள். தாயும் நீயே, தந்தையும் நீயே...... எனவும் அழைக்கிறார்கள். எவ்வளவு சாதாரண வார்த்தை. ஈஸ்வரா அல்லது பிரபுவே என கூறும் போது அவர் என்னதான் செய்ய முடியாது என நினைக்கிறார்கள். இப்போது தந்தை வந்திருக்கிறார் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துக் கொள்கிறீர்கள். பாபா மிகவும் உயர்ந்த வழியை எளிதாகத் தெரிவிக்கிறார். என்னுடைய குழந்தைகளே ! நீங்கள் இராவணனின் வழிப்படி காமச் சிதையில் எரிந்து போய்விட்டீர்கள் என பாபா கூறுகிறார். இப்போது நான் உங்களை தூய்மையாக்கி வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்காக வந்திருக்கிறேன். தூய்மை இல்லாமல் இருக்கும் எங்களை தூய்மையாக்குங்கள் என்று தான் தந்தையை அழைக்கிறார்கள். உங்களுக்கு சேவை செய்வதற்காக நான் வந்திருக்கிறேன் என பாபா கூறுகிறார். குழந்தைகளாகிய நீங்களும் முழு பாரதத்தின் அலௌகீக சேவையை செய்தீர்கள். இந்த சேவையை வேறு யாரும் செய்ய முடியாது. நீங்கள் பாரதத்திற்காகத் தான் செய்கிறீர்கள். நீங்கள் ஸ்ரீமத்படி தூய்மையாகி மேலும் பாரதத்தை மாற்றுகிறீர்கள். இராம இராஜ்யம் வேண்டும் என அண்ணல் காந்தியடிகள் விரும்பினார். இப்போது வேறு எந்த மனிதரும் இராம இராஜ்யத்தை உருவாக்க முடியாது. பதீத பாவனா என பிரபுவை ஏன் அழைத்திருக்க வேண்டும். இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு பாரதத்தின் மீது எவ்வளவு அன்பு இருக்கிறது. உண்மையான சேவையை நீங்கள்

செய்கிறீர்கள். முக்கியமாக பாரத்திற்கும், ஒட்டு மொத்தமாக உலகத்திற்கும் சேவை செய்கிறீர்கள்.

பாரத்தை மீண்டும் இராம இராஜ்யமாக பாபுஜி (தேச தந்தை மகாத்மா காந்திஜி) விரும்பியபடி மாற்றுகின்றோம் என நீங்கள் அறிகிறீர்கள். அவர் எல்லைக்குட்பட்ட பாபுஜி. இவரோ எல்லைக்கப்பாற்பட்ட பாபுஜி. இவர் எல்லைக்கப்பாற்பட்ட சேவை செய்கிறார். இதை குழந்தை களாகிய நீங்கள் தான் அறிகிறீர்கள். உங்களில் கூட வரிசைக் கிரமத்தில்தான் நாம் இராம இராஜ்யத்தை உருவாக்கப் போகிறோம் என்ற பெருமிதம் இருக்கிறது. நீங்கள் அரசு ஊழியர்கள். நீங்கள் தெய்வீக அரசை உருவாக்குகிறீர்கள். உங்களுக்கு பாரத்தைப் பற்றிய பெருமிதம் இருக்கிறது. சத்யுகத்தில் இது தூய்மையான பூமியாக இருந்தது, இப்போது தூய்மையற்றதாகி விட்டது என அறிகிறீர்கள். இப்போது நாம் பாபா மூலமாக மீண்டும் தூய்மையான பூமியாக சுகதாமமாக குப்தமாக மாற்றிக் கொண்டிருக்கிறோம் என நீங்கள் அறிகிறீர்கள். ஸ்ரீமத் கூட மறைமுகமாக கிடைத்துக் கொண்டிருக்கிறது. நீங்கள் பாரத அரசிற்காகத் தான் செய்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஸ்ரீமத் படி பாரதத்திற்கு தன்னுடைய உடல், மனம் பொருளினால் உயர்ந்ததிலும் உயர்ந்த சேவை செய்துக் கொண்டிருக்கிறீர்கள். காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு முறைகள் சிறைகளுக்கு சென்றிருக்கின்றனர். நீங்கள் சிறைக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. உங்களுடையது ஆன்மீக விசயம் ஆகும். நீங்கள் 5 விகாரங்கள் என்ற இராவணனுடன் போரிட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். இராவணன் தான் முழு உலகையும் ஆட்சி செய்துக் கொண்டிருக்கின்றான். இது உங்களுடைய சேனையாகும். இலங்கை என்பது மிகச் சிறிய தீவாகும். இந்த சிருஷ்டி எல்லையற்ற தீவாகும். நீங்கள் எல்லையற்ற தந்தையின் உயர்ந்த வழிப்படி அனைவரையும் இராவணனின் சிறையிலிருந்து விடுவிக்கிறீர்கள். இந்த தூய்மை இல்லாத அசுத்த உலகம் அழியத்தான் வேண்டும் என நீங்கள் அறிகிறீர்கள். நீங்கள் சிவ சக்திகள். இந்த கோபியர் கூட சிவ சக்தியாவார். நீங்கள் குப்தமாக பாரத்திற்கு மிகப் பெரிய சேவை செய்துக் கொண்டிருக் கிறீர்கள். இன்னும் போகப் போக அனைவருக்கும் தெரியும். உங்களுடையது ஸ்ரீமத்படியான ஆன்மீக சேவையாகும். நீங்கள் குப்தமாக இருக்கிறீர்கள். இந்த பி.கே பாரதத்தை தன்னுடைய உடல் மனம் பொருளினால் உயர்ந்ததிலும் உயர்ந்த உண்மையான கண்டமாக மாற்றுகிறார்கள் என அரசாங்கத்திற்குத் தெரியவில்லை. பாரதம் உண்மையான கண்டமாக இருந்தது. இப்போது பொய்யான கண்டமாகி விட்டது. உண்மையானவர் ஒரு தந்தை தான். கடவுள் உண்மையானவர் (சத்திய மானவர்) என்று சொல்லப்படுகிறது. நரனிலிருந்து நாராயணனாக மாறுவதற்கான சத்திய மான கல்வியை உங்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கின்றார். போன கல்பத்தில் கூட உங்களை நரனிலிருந்து நாராயணனாக மாற்றினேன் என பாபா கூறுகின்றார். இராமாயணத்தில் என்னென்ன கதைகள் எழுதியிருக்கிறார்கள். இராமர் குரங்கு சேனை வைத்திருந்தார் என கூறுகிறார்கள். முதலில் நீங்கள் குரங்கு போன்று இருந்தீர்கள். ஒரு சீதையைப் பற்றிய விசயம் அல்ல. நாம் எப்படி இராவண இராஜ்யத்தை அழிப்பது, இராம இராஜ்யத்தை உருவாக்குவது என்பதை பாபா புரிய வைக்கிறார். இதில் எந்த துன்பமும் இல்லை. அவர்கள் எவ்வளவு செலவு செய்கிறார்கள். இராவணனின் கொடும்பாவியை செய்து பிறகு அதை எரிக்கிறார்கள். எதையும் புரிந்துக் கொள்ளவில்லை. பெரிய பெரிய மனிதர்கள்

அனைவரும் போகிறார்கள். வெளிநாட்டவர்களுக்கும் காண்பிக்கிறார்கள். ஆனால் எதையும் புரிந்துக் கொள்ளவில்லை. இப்போது தந்தை புரிய வைக்கிறார் என்றால், குழந்தைகளாகிய உங்கள் மனதில் நாம் பாரதத்திற்கு உண்மையான ஆன்மீக சேவை செய்துக் கொண்டிருக்கிறோம் என்ற உற்சாகம் எவ்வளவு இருக்கிறது. மற்றபடி முழு உலகமும் இராவணின் வழிப்படி சென்றுக் கொண்டிருக்கிறது. நீங்கள் இராமரின் வழிப்படி செல்கிறீர்கள். இராமர் என்று வேண்டுமனாலும் சொல்லுங்கள், சிவன் என்று வேண்டுமானாலும் சொல்லுங்கள், நிறைய பெயர் வைத்திருக்கிறார்கள்.

குழந்தைகளாகிய நீங்கள் ஸ்ரீமத்படி நடக்கும் அதிக மதிப்பு வாய்ந்த சேவாதாரிகள். ஓ, பதீத பாவனா வந்து எங்களை தூய்மையாக்குங்கள் என கூறுகிறார்கள். சத்யுகத்தில் நமக்கு எவ்வளவு சுகம் கிடைக்கிறது என நீங்கள் அறிகிறீர்கள். ஏராளமான செல்வம் கிடைக்கிறது. அங்கே சராசரி வயது கூட எவ்வளவு அதிகமாக இருக்கிறது. அங்கே அனைவரும் யோகிகள். இங்கே அனைவரும் போகிகள். அவர்கள் தூய்மையானவர்கள். இங்கேயோ தூய்மை இல்லாதவர்களாக இருக்கிறார்கள். எவ்வளவு இரவு, பகலுக்குள்ள வித்தியாசம் இருக்கிறது. கிருஷ்ணரைக் கூட யோகி என்கிறார்கள், மகாத்மா எனவும் கூறுகிறார்கள். ஆனால் அவரோ உண்மையான மகாத்மா ஆவார். சர்வ குண சம்பன்னர்...... என அவருடைய மகிமைகள் பாடப்படுகிறது. ஆத்மா மற்றும் உடல் இரண்டும் தூய்மை யாக இருக்கிறது. சன்னியாசிகள் இல்லறத்தில் இருப்பவர்களிடம் விகாரத்தினால் பிறந்து சன்னியாசிகள் ஆகிறார்கள். இந்த விஷயங்களை இப்போது உங்களுக்கு பாபா புரிய வைக்கிறார். இச்சமயம் மனிதர்கள் தவறானவர்களாகவும் மகிழ்ச்சியற்றவர்களாவும் இருக்கிறார்கள். சத்யுகத் தில் எப்படி இருந்தனர். தார்மீக சிந்தனையானவர்களாகவும், அறநெறி உடையவர் களாகவும் இருந்தனர். 100 சதவீதம் செல்வந்தர்களாக இருந்தனர். சதா மகிழ்ச்சியாக இருந்தனர். இரவு பகல் வித்தியாசம் இருக்கிறது. இதைத் துல்லியமாக நீங்கள் அறிகிறீர்கள். பாரதம் சொர்க்கத்திலிருந்து நரகமாக எப்படி மாறுகிறது என யாருக்கும் தெரியாது. லஷ்மி நாராயணன் பூஜை செய்கிறார்கள், கோயில்களைக் கட்டுகிறார்கள். ஆனால் எதையும் புரிந்துக் கொள்ளவில்லை. நல்ல நல்ல நிலையில் இருக்கக் கூடியவர்களுக்கு, பிர்லா போன்றவர்களுக்குக் கூட இந்த லஷ்மி நாராயணன் எப்படி இந்த பதவியை அடைந்தனர், என்ன செய்ததால் இவர்களுக்கு கோவில்கள் கட்டப்பட்டன என்பதைப் புரிய வைக்கலாம் என பாபா புரிய வைத்துக் கொண்டிருக்கிறார். தொழிலைப் பற்றி அறியாமல் பூஜை செய்வது கூட கல்லை பூஜிப்பது அல்லது பொம்மை பூஜை போன்றாகும். மற்ற தர்மத்தினரோ, கிறிஸ்து எந்த நேரத்தில் வந்தார் மீண்டும் வருவார் என்பதை அறிந்திருக்கிறார்கள்.

எனவே குழந்தைகளாகிய உங்களுக்கு ஆன்மீகப் பெருமிதம் இருக்க வேண்டும். ஆத்மா குஷி அடைய வேண்டும். அரைக் கல்பமாக தேக உணர்வுடையவராக இருந்தீர்கள். இப்போது அசரீரி ஆகுங்கள், தன்னை ஆத்மா என உணருங்கள் என பாபா கூறுகின்றார். நம்முடைய ஆத்மா பாபாவிடமிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறது. மற்ற சத்சங்கங்களில் ஒரு போதும் இவ்வாறு புரிய வைக்க மாட்டார்கள். இந்த ஆன்மீகத் தந்தை ஆத்மாக்களுக்குப் புரிய வைக்கிறார். ஆத்மா தான் அனைத்தையும் கூறுகிறது அல்லவா? நான் பிரதம மந்திரி, இன்னார் என ஆத்மா தான் கூறுகிறது. ஆத்மா இந்த உடல் மூலமாக நான்

பிரதம மந்திரி என கூறுகிறது. இப்போது ஆத்மாக்களாகிய நாம் முயற்சி செய்து தேவி தேவதையாக மாறிக் கொண்டிருக்கிறோம் என நீங்கள் கூறுகிறீர்கள். நான் ஆத்மா, இது எனது உடல் ஆகும். ஆத்ம அபிமானியாக மாறுவதில் தான் நிறைய உழைப்பிருக்கிறது. அடிக்கடி தன்னை ஆத்மா என உணர்ந்து தந்தையை நினைத்தால் விகர்மம் வினாசம் ஆகும். நீங்கள் மிகவும் மதிப்பு வாய்ந்த சேவாதாரிகள். குப்தமாக (ரகசியமாக) கடமை களைச் செய்கிறீர்கள். எனவே மறைமுக பெருமிதமும் வேண்டும். நாம் அரசாங்கத்தின் ஆன்மீக ஊழியர்கள். பாரதத்தை சொர்க்கமாக மாற்றுகிறோம். புதிய உலகத்தில் புதிய பாரதம், புதிய டில்லி இருக்க வேண்டும் என பாபுஜியும் விரும்பினார். இப்போது புது உலகம் இல்லை. இந்த பழைய டில்லி சுடுகாடாக மாறுகிறது. மீண்டும் சொர்க்கமாக மாறும். இப்போது இதற்கு சொர்க்கம் என்று கூற முடியாது. புது உலகில் சொர்க்கம் போன்ற புது டில்லியை நீங்கள் உருவாக்கிக் கொண்டி ருக்கிறீர்கள். இது மிகவும் புரிந்துக் கொள்ள வேண்டிய விசயம் ஆகும். இந்த விசயங்களை நீங்கள் மறக்கக்கூடாது. பாரதத்தை மீண்டும் சுகதாமமாக மாற்றுவது எவ்வளவு உயர்ந்த செயல். நாடகத்தின் படி இந்த சிருஷ்டி பழையதாக ஆகியே தீரும். துக்கதாமம் அல்லவா? துக்கத்தை நீக்கி சுகம் அளிப்பவர் என ஒரு தந்தையை தான் கூற முடியும். பாபா 5000 வருடங்களுக்குப் பிறகு வந்து துக்கம் நிறைந்த பாரதத்தை சுகமுடையதாக மாற்றுகிறார். சுகத்தையும் அளிக்கிறார். அமைதியும் அளிக்கிறார். மனதிற்கு அமைதி எப்படி கிடைக்கும் என நீங்கள் அறிகிறீர்கள். இப்போது அமைதி சாந்திதாமம் ஸ்வீட்ஹோமில் தான் இருக்கிறது. அதற்கு சாந்திதாமம் என்று கூறப்படுகிறது. அங்கே சத்தம் இல்லை. துன்பமும் இல்லை. சூரியன் சந்திரன் போன்றவைகளும் இல்லை. இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு இந்த ஞானம் அனைத்தும் இருக்கிறது. தந்தையே வந்து கீழ்ப்படிந்த வேலைக்காரனாக இருக்கிறார் அல்லவா? ஆனால் தந்தையை முற்றிலும் அறிய வில்லை. அனைவரையும் மகாத்மா என்று கூறுகிறார்கள். இப்போது சொர்க்கத் தில் இருப்பவர்களைத் தவிர வேறு யாரையும் மகான் ஆத்மா என்று கூற முடியாது. அங்கே தான் தூய்மையான ஆத்மாக்கள் இருக்கிறார்கள். தூய்மை இருந்தது என்றால் சுகம் சாந்தியும் இருந்தது. இப்போது தூய்மை இல்லை. எனவே எதுவும் இல்லை. தூய்மைக்கு தான் மரியாதை இருக்கிறது. தேவதைகள் தூய்மையாக இருக்கிறார்கள். ஆகவே தான் அவர்களுக்கு முன்பு தலை வணங்கு கிறார்கள். தூய்மையானவர்களுக்கு பாவனமானவர்கள் என்றும், தூய்மையற்றவர்களுக்கு பதீத மானவர்கள் என்றும் பெயர். இவரோ முழு உலகத்திற்கும் எல்லையற்ற பாபுஜி. இவ்வாறு மேயரைக் கூட நகர தந்தை என கூறுவார்கள். அங்கே இது போன்ற விஷயங்கள் கிடையாது. அங்கே அனைத்தும் ஒழுங்கு முறைப்படி நடக்கிறது. ஓ, பதீத பாவனா வருங்கள் என அழைக் கிறார்கள். தூய்மையாகுங்கள் என பாபா கூறுகின்றார். இது எப்படி முடியும்? பிறகு குழந்தைகள் எப்படி பிறப்பார்கள், சிருஷ்டி எப்படி விரிவடையும் என கேட்கிறார்கள். லஷ்மி நாராயணன் நிர்விகாரியாக இருந்தனர் என அவர்களுக்குத் தெரியாது. குழந்தைகளாகிய நீங்கள் எவ்வளவு எதிர்ப்புகளை பொருத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

நாடகத்தில் போன கல்பத்தில் என்ன நடந்ததோ அது திரும்ப நடக்கிறது. நாடகம் என்பதோடு இருந்து விடக் கூடாது- நாடகத்தில் என்ன இருக்கிறதோ அது கிடைக்கும் என்பது கிடையாது. பள்ளிக் கூடத்தில் இவ்வாறு நினைத்துக் கொண்டு அமர்ந்திருந்தால் யாராவது தேர்ச்சி பெற முடியுமா? ஒவ்வொரு

விசயத்திற்காகவும் மனிதர்கள் முயற்சி செய்கிறார்கள். முயற்சி இல்லாமல் தண்ணீர் கூட கிடைக்காது. ஒவ்வொரு நொடியும் செய்யக் கூடிய முயற்சியானது பலனை பெறுவதற்கே ஆகும். இந்த எல்லையற்ற முயற்சி செய்வது எல்லையற்ற சுகத்திற்காக ஆகும். இப்போது பிரம்மாவின் இரவிலிருந்து பிராமணர்களின் இரவு, மீண்டும் பிராமணர்களின் பகல் தோன்றும், சாஸ்திரங்களில் படித்தார்கள். ஆனால் புரிந்துக் கொள்ளவில்லை. பக்தி தனி, ஞானம் தனியாகும். நீங்கள் காமச்சிதையில் அமர்ந்து அனைவரும் கருப்பாகி விட்டீர்கள் என பாபா கூறுகிறார். கிருஷ்ணரைக் கூட சியாம் சுந்தர் என கூறுகிறீர்கள் அல்லவா? பூஜாரிகள் குருட்டு நம்பிக்கை உடையவர்களாக இருக்கிறார்கள். எவ்வளவு தத்துவ பூஜைகள் செய்கிறார்கள். சரீரத்தை பூஜிக்கிறார்கள் என்றால் அதுவும் 5 தத்துவங்களை பூஜிப்பதாகி விடுகிறது. இதற்கு தான் விபச்சாரி (பல தெய்வங்களை பூஜிக்கும்) பூஜை என்று கூறப்படுகிறது. முதலில் பக்தியும் தூய்மை யானதாக இருந்தது. ஒரு சிவனை மட்டுமே வணங்கினர். இப்போது பாருங்கள் எவற்றை யெல்லாம் பூஜை செய்துக் கொண்டிருக்கிறார்கள். பாபா அதிசயத்தையும் காண்பிக்கிறார். ஞானத்தையும் புரிய வைத்துக் கொண்டிருக்கிறார். முட்களை மலராக மாற்றிக் கொண்டிருக்கிறார். அதற்கு மலர்த்தோட்டம் என்று பெயர். கராச்சியில் காவலுக்கு ஒருவன் இருந்தார். அவரும் தியானத்தில் சென்று விட்டார். நான் சொர்க்கத்தில் இருந்தேன், இறைவன் எனக்கு மலரைக் கொடுத்தார் என்று கூறினார். அவர் மிகவும் ஆனந்தம் அடைந்தார். அதிசயம் அல்லவா? அவர்கள் 7 அதிசயங்கள் என்கிறார்கள். உண்மையில் உலக அதிசயம் சொர்க்கமாகும். இது யாருக்கும் தெரியவில்லை.

உங்களுக்கு எவ்வளவு முதல் தரமான ஞானம் கிடைத்திருக்கிறது. நீங்கள் எவ்வளவு குஷி அடைய வேண்டும். எவ்வளவு உயர்ந்தவர் பாப்தாதா. ஆனால் எவ்வளவு எளிதாக இருக்கிறார், அவரை நிராகார், நிர்அகங்காரி என பாபாவின் மகிமைகள் பாடப்படுகிறது. பாபா வந்து தான் சேவை செய்ய வேண்டும் அல்லவா? பாபா எப்போதும் குழந்தைகளின் சேவையை செய்து அவர்ளுக்கு செல்வத்தை அளித்து விட்டு பிறகு அவர் வானபிரஸ்த நிலையில் இருந்து விடுகிறார். குழந்தைகளை தலைமீது தூக்கி வைத்துக் கொள்கிறார். குழந்தைகளாகிய உங்களை உலகத்திற்கே அதிபதியாக மாற்றுகிறார். இனிமையான இல்லத்திற்குச் சென்று பிறகு இனிமையான சக்கரவர்த்தி பதவியை பெறுவீர்கள். நான் சக்கரவர்த்தி பதவியை அடைவதில்லை என பாபா கூறுகிறார். உண்மையான பலனை எதிபார்க்காத சேவாதாரி ஒரேயொரு தந்தை தான். எனவே குழந்தைகளுக்கு எவ்வளவு குஷி ஏற்பட வேண்டும். ஆனால் மாயை மறக்க வைக்கிறது. இவ்வளவு பெரிய பாப்தாதாவை ஒரு போதும் மறக்கக் கூடாது. தாத்தாவின் சொத்து பற்றி எவ்வளவு பெருமிதம் இருக்கிறது. உங்களுக்கு சிவபாபா கிடைத்திருக்கிறார் அவருடைய சொத்து இருக்கிறது. என்னை நினையுங்கள் தெய்வீக குணங்களைக் கடைப்பிடியுங்கள் என பாபா கூறுகிறார். அசுர குணங்களை நீக்கிவிடுங்கள். நான் நிர்குணமாக இருக்கிறேன். எனக்குள் எந்த குணமும் இல்லை என பாடுகிறார்கள். நிர்குணம் என்ற அமைப்பு கூட இருக்கிறது. இப்போது பொருளை யாரும் புரிந்துக் கொள்ளவில்லை. நிர்குணம் என்றால் எந்த குணமும் இல்லை என்று பொருளாகும். ஆனால் அவர்கள் புரிந்துக் கொள்வது கிடையாது. குழந்தைகளாகிய உங்களுக்கு ஒரே விஷயத்தைத் தான் புரிய வைக்கிறார். நாங்கள் பாரதத்தின் சேவையில்

இருக்கிறோம் என கூறுங்கள். யார் அனைவருக்கும் தந்தையாக இருக்கிறாரோ நாங்கள் அவருடைய ஸ்ரீமத்படி நடக்கிறோம். ஸ்ரீமத் பகவத் கீதை என பாடப்பட்டிருக்கிறது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீக தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. மிக உயர்ந்த பாப்தாதா எளிமையாக இருப்பது போல மிக மிக எளிமையாக நிராகாரியாக, நிர் அகங்காரியாக இருக்க வேண்டும். பாபா மூலமாக கிடைத்துள்ள முதல் தரமான ஞானத்தை சிந்தனை செய்ய வேண்டும்.

2. நாடகம் அப்படியே திரும்ப நடந்துக் கொண்டிருக்கிறது. இதில் எல்லையற்ற முயற்சி செய்து எல்லையற்ற சுகத்தின் பிராப்தியை அடைய வேண்டும். ஒரு போதும் நாடகம் என்று கூறிக் கொண்டு நிற்கக் கூடாது. சொத்திற்காக முயற்சி அவசியம் செய்ய வேண்டும்.

வரதானம் : அவ்யக்த சொரூபத்தின் சாதனையின் மூலம் சக்திசாலி வாயுமண்டலத்தை உருவாக்கக் கூடிய அவ்யக்த பரிஸ்தா ஆகுக.

வாயுமண்டலத்தை சக்திசாலி ஆக்குவதற்கான சாதனம் தனது அவ்யக்த சொரூபத்தின் சாதனை யாகும். இதற்கு அடிக்கடி கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் எந்த விசயத்தில் சாதனை செய்ய வேண்டுமோ, அந்த விசயத்தில் தான் கவனம் இருக்கும். ஆக அவ்யக்த சொரூபத்தின் சாதனை என்றால் அடிக்கடி கவனம் என்ற தபஸ்யா தேவை. ஆகையால் அவ்யக்த பரிஸ்தா பவ என்ற வரதானத்தை நினைவில் வைத்து சக்திசாலி வாயுமண்டலத்தை உருவாக்கும் தபஸ்யா செய்யுங்கள். அப்போது உங்கள் முன் யார் வந்தாலும் அவர்கள் ஸ்தூல மற்றும் வீண் விசயங்களிலிருந்து விடுபட்டு விடுவார்கள்.

சுலோகன்: சர்வ சக்திவான் பாபாவை வெளிப்படுத்துவதற்கு ஏகாக்ரதா சக்தியை அதிகப்படுத்துங்கள்.

தனது சக்திசாலியான மனதின் மூலம் சக்தி கொடுக்கும் சேவை செய்யுங்கள்:

எவ்வாறு தனது ஸ்தூல காரியத்தை தினமும் செட் செய்கிறீர்களோ, அவ்வாறு தனது மனம் சக்திசாலி ஸ்திதிக்காகவும் செட் செய்யுங்கள். எந்த அளவிற்கு தனது மனதை சக்திசாலி சங்கல்பத்தில் பிசியாக வைத்துக் கொள்வீர்களோ, மனம் அப்செட் ஆவதற்கு நேரம் கிடைக்காது. மனம் சதா செட் அதாவது ஏகாக்ர (ஒரு நிலையாக) நிலையில் இருக்கும் போது தானாகவே நல்ல அதிர்வலைகள் பரவும். சேவை நடைபெறும்.